# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2324/45 - 2023 මාර්තු මස 24 වැනි සිකුරාදා - 2023.03.24

*2324/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் உபப்பிரிவு 4(1), 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி,பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
*2023, மாச்சு 23.*


1A - PG 6273 — 376 (2023/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஒழுங்கு விதிமுறைகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் **“2023 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்”** என அழைக்கப்படும்.

2. 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி முதல் இந்த ஒழுங்கு விதிகள் நடைமுறைக்கு வரும்.

3. 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதிய இலக்கம் 2107/45 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்குவிதிகள், இதன் மூலம் திருத்தி அமைக்கப்படுகின்றது.

4. மேல் குறிப்பிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்குவிதிகள் இல 3 (ஆ) மற்றும் இல 3 (இ) நீக்கப்பட்டு மாற்றீடாக பின்வரும் புதிய இல 3 (ஆ) பின்வருமாறு வாசிக்கப்பட வேண்டும்.

   “3 (ஆ) குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 8703.21.63 மற்றும் 8703.21.72, மேலும் 50% வெளி தொழிற்சாலை பெறுமதியை (ex-factory value) விட அதிகமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட /பொருத்தப்பட்ட உள்நாட்டு தொழில்நுட்ப பெறுமதி சேர்ப்புடன் கூடிய (இலாப வீதம் நீக்கப்பட்ட) நான்கு சக்கர வண்டிகளானது ABS தொழில்நுட்பத்திற்கு பொருத்தமற்றவையாகும். 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 22/1653/617/013 ஆம் இலக்கம் கொண்ட அமைச்சரவை முடிவுகளின்படி கைத்தொழில் அமைச்சின் கீழ் அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு உற்பத்தியாளர் / பொருத்துனர் இலங்கை சுங்கத்தின் உட் பிணைப்பு (In Bond) வசதியுடைய தயாரிப்பில் மற்றும் 2026 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன் வீட்டு பாவனைக்கானவைகள் வெளி பிணைப்பு சுங்க வெளிப்படுத்துகையை (Ex-Bond CUSDEC) சமர்ப்பிப்பதன் ஊடாக இலங்கை சுங்கத்திலிருந்து வெளியேற்றலாம்.”

5. மேலே குறிப்பிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்குவிதிகளில் அட்டவணை II இல் IV ஆவது நிரலில் இலக்கம் 3 (i), (ii) மற்றும் (iii) இல் காட்டப்பட்டுள்ள HS குறியீடுகள் , 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2312/75 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் மாற்றம் செய்யப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளுக்கு (HS குறியீடுகள்- 2022 ஆம் பதிப்பு) உரிய விபரங்கள் கீழ்க் காணப்படுமாறு திருத்தி அமைக்கப்பட்டு வாசிக்கப்படல் வேண்டும்.

### அட்டவணை II

### பாதுகாப்பு அளவீடுகள்/ நியமங்கள்

| I | II | III | | | IV |
|---|---|---|---|---|---|
| இல. | இயைபு முறை தலைப்பு | பாதுகாப்பு அளவீடுகள்/ நியமங்கள் | | | பாதுகாப்பு நடவடிக்கைகள் /தரங்களுக்குட்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள் |
| | | காற்றடைத்த பைகள் | ஆசனப் பட்டிகள் | ஏபீஎஸ் | |
| 03 (i) | 87.04 | C | C | C | 8704.21.71, 8704.21.72, 8704.21.91, 8704.21.92, 8704.21.93, 8704.21.99<br>8704.31.71, 8704.31.72, 8704.31.91, 8704.31.92, 8704.31.93, 8704.31.99<br>8704.41.71, 8704.41.72, 8704.41.91, 8704.41.92, 8704.41.93, 8704.41.99<br>8704.51.71, 8704.51.72, 8704.51.91, 8704.51.92, 8704.51.93, 8704.51.99 |

**அட்டவணை II** *(தொடர்ச்சி)*

**பாதுகாப்பு அளவீடுகள்/ நியமங்கள்**

| ***I*** | ***II*** | ***III*** | | | ***IV*** |
|---|---|---|---|---|---|
| *இல.* | *இயைபு முறை தலைப்பு* | *பாதுகாப்பு அளவீடுகள்/ நியமங்கள்* | | | *பாதுகாப்பு நடவடிக்கைகள் /தரங்களுக்குட்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள்* |
| | | *காற்றடைத்த பைகள்* | *ஆசனப் பட்டிகள்* | *ஏபீஎஸ்* | |
| 03 (ii) | | - | C | C | HS குறியீடுகளான 3 (i) மற்றும் 3 (iii) ன் நிரல் 4 தவிர்ந்த 87.04 HS தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்ட HS குறியீடுகள் பின்வருமாறு : 8704.21.21, 8704.21.22, 8704.31.21, 8704.31.22, 8704.31.23, 8704.41.21, 8704.41.22, 8704.51.21, 8704.51.22, 8704.51.23, 8704.60.10, 8704.60.20 |
| 03 (iii) | | - | C | C | 8704.21.41, 8704.21.42, 8704.21.43, 8704.21.44, 8704.21.61, 8704.21.62, 8704.21.63, 8704.21.64, 8704.21.65, 8704.21.66, 8704.21.67, 8704.21.68<br>8704.31.41, 8704.31.42, 8704.31.43, 8704.31.44, 8704.31.61, 8704.31.62, 8704.31.63, 8704.31.64, 8704.31.65 ,8704.31.66, 8704.31.67, 8704.31.68<br>8704.41.41, 8704.41.42, 8704.41.43, 8704.41.44, 8704.41.61, 8704.41.62, 8704.41.63, 8704.41.64, 8704.41.65, 8704.41.66, 8704.41.67, 8704.41.68<br>8704.51.41, 8704.51.42, 8704.51.43, 8704.51.44, 8704.51.61, 8704.51.62, 8704.51.63, 8704.51.64, 8704.51.65, 8704.51.66, 8704.51.67, 8704.51.68 |

(C – பாதுகாப்பு அளவீடுகள்/ நியமங்களுக்கு அமைவாக)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.